# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 01.11.2023**

| Name : வினுப்பிரியா | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1 –3 present. )**

சாட்சி ஆஜர். மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்பஅழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் Bsc வரை படித்துள்ளேன். புகார் கொடுத்த பின்னிட்டு காவல் நிலையம் எத்தனை முறை சென்றேன் என்றால் 2–3 முறை சென்றிருப்பேன். நான் கொடுத்த புகார் மனு யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் நானே எழுதினேன். புகார் மனு எந்த தேதி, எந்த மாதம், எத்தனைமணிக்கு கொடுத்தேன் என்றால் காலை 10 – 11 மணிக்கு 17.10.2023 ம் தேதி கொடுத்தேன்.

2) நான் கொடுத்த புகார் மனுவில் 1–ம் எதிரி போனில் பேசியது தொடர்பாக போன் நெம்பர் எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த அலைபேசியில் தொடர்பு கொண்ட பெயர், முகவரி சொல்லவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிரிக்கு 2 வது திருமணம் நடந்தது குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு பார்த்திருந்தார் நான் திருமணத்தை நிறுத்தியிருப்பேன். அவர் எனக்கு தெரியாமல் தான் செய்துகொண்டார்.

3) 1–ம் எதிரி தூங்கிக்கொண்டிருந்த போது அவரது போன் மூலம் 2 வது திருமணம் செய்தது குறித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். ஆனால் போனில் ஒரு பெண் நண்பர் சொன்னதன் பேரில் தெரிந்துகொண்டேன். அந்த பெண் நண்பர் பெயர், விலாசம் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால்

இல்லை. அந்த பெண்ணினுடைய செல்போன் நெம்பர் நான் குறித்து வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

4) இதன் பின்னிட்டு எனது கணவரிடம் போனில் தொடர்பு கொண்டு 2 வது திருமணம் செய்தது குறித்து கேட்டேன் என்றால் சரிதான். நான் விருப்பப்பட்டு செய்ததாக என்னிடம் சொன்னார். அவர் விருப்பப்பட்டு திருமணம் செய்ததை நான் பதிவு செய்தேனா என்றால் இல்லை. எனது அண்ணன் கார்த்திக் போலிஸ் துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக தனிப்பட்ட புகார் மற்றும் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

5) இந்த வழக்கிற்கு முன்னதாக 1 முதல் 3 ம் எதிரிகள் மீது வேறு பிரச்சனை சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிரி விவாகரத்து மனு தாக்கல் செய்தது குறித்து தெரியுமா என்றால் தெரியும். 1–ம் எதிரி கோயம்புத்தூரில் வசித்த முகவரி, விலாசம் குறித்து எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) எனக்கும், எனது கணவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு, எனது அண்ணன் காவல் துறையில் உள்ளதால் எதிரியின் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 2 Date : 01.11.2023**

| | |
|---|---|
| **Name : செல்வி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 –3 present. )**

சாட்சி ஆஜர். மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்பஅழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) அ.சா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மகள் ஆவார். 1–ம் எதிரி திருமணம் செய்தது குறித்தும், 2, 3 எதிரிகள் கொடுமை படுத்தியதும் குறித்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மகன் என்ன வேலை செய்கிறார் என்றால் காவல் துறையில் பணியில் உள்ளார். என்னிடம் போலிசார் தனிப்பட்ட முறையில் வாக்குமூலம் பெற்றனரா என்றால் வாங்கினார்கள்.

2) எந்த தேதியில் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் மாலை நேரத்தில் 3 –4 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து, ஆய்வாளர் விசாரித்தனர். ஆனால் தேதி நினைவில்லை. என்னை விசாரித்த பிறகு ஏதாவது எழுதினார்களா என்றால் தட்டச்சு செய்தார்கள். தட்டச்சு காவல் நிலையத்தில் செய்தனர் என்றால் சரிதான். என்னிடம் போலிசார் விசாரிக்கவில்லை என்றும், அவ்வாறு விசாரித்திருந்தார் தேதி, காலம், நேரம் சொல்லியிருப்பேன் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1–ம் எதிரி கோவையில் எங்கு வசித்தார் என்ற முகவரி தெரியுமா என்றால் தெரியாது.

3) 1–ம் எதிரிக்கும் எனது மகளுக்கும் குடும்ப பிரச்சனை இருந்ததால் எனது மகன் காவல் துறையில் இருப்பதால் பொய்யாக வழக்கு பதிந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/–தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டூர்.**